23.09.2025

OS No:133/2015

பி.வா.சா. 1 திருமதி. விஜயா க/பெ லெட்சுமணன்.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் காரைக்குடியில் 22 வருடங்களாக வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்துள்ள இடத்திற்கும் காரைக்குடிக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 60 கி.மீ தூரம் இருக்கும். எனது கணவர் இறந்து 11 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். தாவா சொத்திற்கு நான்குமால் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது பட்டா எண் தெரியும். 1ம் வாதி பூங்கோதையும் 1ம் பிரதிவாதி மூக்காயி இருவரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். இருவரது கணவர் பெயரும் விஸ்வநாதன் என்றால் சரிதான். 1ம் வாதியின் மகன் தான் 2ம் வாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பிள்ளைகள் தான் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1, 2 வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது வீட்டில் தான் ஒரே குடும்பமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல எனது வீட்டை உடைத்து வீட்டிற்குள் சென்று 1 முதல் 3 பிரதிவாதிகள் குடியிருக்கிறார்கள் 1, 2 வாதிகள் வேறு வீட்டில் குடியிருக்குறார்கள். 1, 2 வாதிகள் குடியிருக்கும் வீட்டின் கதவு எண், நான்குமால், விஸ்தீரணம், சர்வே எண் தெரியுமா என்றால் அது எல்லாம் தெரியாது. 1, 2 வாதிகள் கூரை வீட்டில் வசிக்கிறார்களா ஓட்டு வீட்டில் வசிக்கிறார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் கணவரான விஸ்வநாதனின் சொந்த ஊர் கருத்தன் பட்டி என்றால் சரிதான். கருத்தன் கிராமத்தில் தான் தாவா 2 இலக்க சொத்து உள்ளது என்றால் சரிதான். வீட்டை உடைத்து பிரதிவாதிகள் குடியிருப்பதாக சொல்வதில் எந்த வருடம் வீட்டை உடைத்தார்கள் என்றால் 2015ம் வருடம் உடைத்தார்கள் அதாவது எனது கணவர் இறந்த பிறகு. எனது கணவர் எந்த வருடம் இறந்தார் என்றால் 2014ம் வருடம் இறந்தார். மேற்படி 2014ம் வருடத்திற்கு முன்பு 1, 2 வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எங்கு இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 1 வாதி, 1 ம் பிரதிவாதி ஆகியோரின் கணவர் விஸ்வநாதன் பிறந்த ஊர்

கருத்தன்பட்டி என்றால் சரிதான். மேற்படி விஸ்வநாதனுக்கு கருத்தன்பட்டியில் சொந்த வீடு உள்ளதா, அவர் எங்கு வசித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா A அட்டவணை சொத்தில் எனக்கு பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை. தாவா B அட்டவணை சொத்தில் எனக்கு பாத்தியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்தின் சர்வே எண், நான்குமால், விஸ்தீரணம் தெரியுமா என்றால் அவ்வளவாக அதன் விவரம் தெரியாது. மேற்படி B அட்டவணை சொத்தை பிரதிவாதி மூக்கையா வகையரா எவ்வளவு நாட்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் 2015ம் வருடத்தில் இருந்து அனுபவித்து வருகிறார்கள். 1ம்வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் மாணிக்கம் என்றால் சரிதான். மேற்படி மாணிக்கத்தின் மனைவி பெயர் மீனாள் என்றால் சரிதான். மேற்படி 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் அவர்களுடைய பெற்றோர் அனைவருக்கும் சொந்த ஊர் ஆபத்தாரணபட்டி என்றால் சரிதான். 1ம் வாதி, 1ம் பிரதிவாதியின் கணவர் விஸ்வநாதனுக்கு அவருடைய திருமணத்திற்கு முன்பாக கருததன் பட்டியில் சொத்து ஏதேனும் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விஸ்வநாதன் திருமணத்திற்கு பின்பு சிங்கப்பூருக்கும், அதன் பிறகு கத்தாருக்கும் சென்று வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. விஸ்வநாதன் வெளிநாட்டில் இருந்து சம்பாதித்து அவருடைய மனைவியான 1ம் வாதிக்கு பணம் அனுப்பி வைத்தாரா என்றால் தெரியாது. தங்களுக்கு கஷ்ட்ட சூழ்நிலை உள்ளது சொத்தை வாங்கி கொள்ளுமாறு 1ம் பிரதிவாதி மூக்காயி அவரது கணவர் மற்றும் குடும்பத்தார் அனைவரும் என்னிடம் கேட்டார்களா என்றால் ஆமாம். மேற்படி சொத்தை கிரையம் வாங்கிக்க சொல்லி எந்த வருடம் கேட்டார்கள் என்றால் 2009ம் வருட வாக்கில் கேட்டார்கள். மேற்படி கிரையம் பெற்று கொள்ள கேட்க்கும் போது 1ம் வாதி பூங்கோதையும் உடன் வந்தாரா என்றால் ஆமாம். மூக்காயி தாவா B அட்டவணை சொத்தை கிரையம் பெற்றுள்ள சமயத்தில் அவருக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரிதான். B அட்டவணை 1ம் சொத்தை ஏரியூர் ஜெயக்கொடி என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா B அட்டவணை 2 ம்

சொத்து ஆதியில் ஏரியூரை சேர்ந்த சண்முகம் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி B அட்டவணை 1, 2 சொத்துக்களை 1ம் பிரதிவாதி யாருடைய பணத்தை கொண்டு கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. மேற்படி தாவா B அட்டவணை சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றிட அவரது கணவர் விஸ்வநாதன் வெளிநாட்டில் சம்பாதித்து அனுப்பிய பணத்தை கொண்டு கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி தெரியாது. தாவா B அட்டவணை சொத்தில் உள்ள வீட்டை யார் கட்டியது என்றால் நான் தான் கட்டினேன், நான் வீடு கட்டுவதற்கு முன்னால் அது காலியிடமாக இருந்ததா என்றால் ஆமாம்.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.23 18:07:54 +0530